**செ. கு. எண்: 117** **நாள்: 20.07.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – **20.7.2018**

**திருப்பூர் மாவட்டம்,** அமராவதி அணையிலிருந்து 8 பழைய வாய்க்கால் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு திருப்பூர் மாவட்டம், அமராவதி அணை பழைய வாய்க்கால் கிராம நீரினைப் பயன்படுத்துவோர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. திருப்பூர் மாவட்டம், அமராவதி அணை பழைய வாய்க்கால் கிராம நீரினைப் பயன்படுத்துவோர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, அமராவதி அணையிலிருந்து தற்போதைய நீர் இருப்பு மற்றும் எதிர்பார்க்கும் நீர் வரத்தினைக் கருத்திற்கொண்டு, முதல் கட்டமாக, திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த முதல் 8 பழைய வாய்க்கால்களின் பாசன பகுதிகளுக்கு குறுவை சாகுபடிக்காக **23.7.2018 முதல் 19.11.2018** முடிய 120 நாட்களுக்கு உரிய இடைவெளி விட்டு மொத்தம் **1944 மி.க.அடி** தண்ணீரை திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள **7,520 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**